தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# சென்னை வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பா.ஜ.க. – NDA அரசின் மெத்தனத்தால் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) தட்டுப்பாட்டை கண்டித்தும் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் – NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து சென்னை வடக்கு மாவட்டம் முழுவதும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் கீழ்கண்ட அட்டவணைபடி நடைபெற உள்ளது.

| நாள் | பகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 15–03–2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு | பெரம்பூர் வடக்கு | 13 –வது மத்திய குறுக்கு தெரு, மகாகவி பாரதி நகர் (பேருந்து நிலையம் அருகில்) |
| | பெரம்பூர் தெற்கு | பழநி ஆண்டவர் கோயில் தெரு (எஸ்.ஆர்.டீ கடை அருகில்) |
| | இராயபுரம் கிழக்கு | எம்.எஸ்.கோயில் தெரு (கல் மண்டபம் அருகில்) |
| | இராயபுரம் மேற்கு | தங்க சாலை (பேருந்து நிலையம் அருகில்) |
| | ஆர்.கே.நகர் கிழக்கு | வள்ளலார் நெடுஞ்சாலை (தபால் நிலையம் அருகில்) |
| | ஆர்.கே.நகர் மேற்கு | வைத்தியநாதன் தெரு, (மேம்பாலம் அருகில்) தண்டையார்பேட்டை |

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி, அரக்கோணம் ,சோளிங்கர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 286 பயனிகளுக்கு 2006 2007 நிதி ஆண்டிற்கான கலைஞரின் கனவு இல்லம் வீடு கட்டுவதற்கான ஆணையினை கைத்தறி மற்றும் துணிகள் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர் காந்தி பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜே.யு.சந்திரகலா நெமிலி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பி.வடிவேலு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசையும் – அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுதிகள் - பேரூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர். மார்ச் 15-

ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை புறக்கணித்தும் வளர்ச்சி திட்டப்பணிகள் எதையும் நிறைவேற்றாமல் வஞ்சித்து வரும் வேளையில் சமையல் எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட முடியாமல் திணறி வருவதை கண்டித்தும் அதன் அடிமை கூட்டணி கட்சிகளை கண்டித்தும் வேலூர் தெற்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்ட மன்ற தொகுதிகளிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இது குறித்து மாவட்ட செயலாளரும், சட்ட மன்ற உறுப்பினருமான ஏ. பி. நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கயின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை. தற்போது ஒன்றிய பாசிச பாஜக அரசு மாற்றான் தாய் மனபான்மையுடன் வெறும் வெற்று அறிவிப்புகளை நாளிதழ்களின் வாயிலாக அறிவிப்பு செய்து தற்போது சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டு வளர்ச்சிக்கான எந்த ஒரு திட்டத்தையும் அறிவிக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து மத ரீதியாகவும், மொழி ரீதியாக வும் பிரித்தாளும் மத வேற்றுமை அரசியலை முன்னெடுத்து உலக அரங்கில் இந்தியாவின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தி அனைத்து தரப்பு மக்களின் நலன்களை புறம் தள்ளி ஆர்.எஸ்.எஸ் கூட்டத்தினரின் வளர்ச்சிக்காக நாட்டின் வளங்கள் அனைத்தையும் தாரை வார்த்து பொய்யான ஜனநாயகத்தை கட்டமைத்து ஏமாற்றி வருகின்றது.

தற்போது இஸ்ரேல் மற்றும் ஈரான் போரினால் நிலவி வரும் சமையல் எரிவாயு தட்டுபாட்டை சரியான முறையில் முன்னெச்சரிக்கையுடன் கையாளா மல் பொதுமக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கி வருகின்றது, இதனால் வணிக நிறுவனங்கள் சரிவர இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் ஹோட்டல் உணவு பண்டங்களின் விலையும் கடுமையாக உயர்ந்து இதனால் பாதிப்புக்கள் அதிகம் ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த நிலையை சரியாக கையாளாமல் மெத்தன போக்குடன் அலட்சியத்துடன் உள்ள ஒன்றிய பாஜக அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்திடும் வகையில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (15.03.2026 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.30 மணிக்கு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என அறிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின், வழிக்கட்டுதலின்படியும் கழக பொது செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக வடக்கு மண்டல பொறுப்பாளர் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துரை அமைச்சர் எ.வ. வேலு ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படியும் அணைக்கட்டு சட்ட மன்ற தொகுதி சார்பில் அணைக்கட்டு பேருந்து நிலையம் அருகில் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் மாவட்ட துணை செயலாளர் மலர்விழிலோகநாதன், மாவட்ட ஊராட்சி குழு, திட்டக்குழு தலைவர் மு. பாபு, ஒன்றிய செயலாளர்கள் பி. வெங்கடேசன், கோ. குமர பாண்டியன் மற்றும் பேரூர் செயலாளர்கள் தி.மு.ஜாகிர் உசேன், ஆர். பெருமாள்ராஜா ஆகியோர்கள் முன்னிலையிலும் வேலூர் சட்ட மன்ற தொகுதி சார்பில் வேலூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்,

ஒன்றிய செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், என்.கஜேந்திரன், பகுதி கழக செயலாளர்கள் ஆர். பி.இ.சசிகுமார், எம்.ஏ. கணேஷ்சங்கர், எஸ். தயாள் ராஜ், வி.ஜி.கே.சுந்தரவிஜி, ஆர்.சத்திய மூர்த்தி, ஜி. பாலமுரளி கிருஷ்ணா, சி.எம். தங்க துரை, ஆர்.கே.ஐயப்பன், பி. முருகபெருமாள், தி.அ.முன்வர் பாஷா மற்றும் பேரூர் செயலாளர் பி.அருள்நாதன் ஆகியோர்கள் முன்னிலையிலும் குடியாத்தம் சட்டமன்ற தொகுதி சார்பில் குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகில் குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன் எம்.எல்.ஏ. தலைமையில், மாவட்ட துணை செயலாளர் ஜி.எஸ்.அரசு, நகர செயலாளர் எஸ். சௌந்தர்ராஜன், ஒன்றிய செயலாளர் கே.ரவி ஆகியோர்கள் முன்னிலையிலும் பேர்ணாம்பட்டு பங்களா மேட்டில் மாவட்ட துணை செயலாளர் எம். பிரபாத்குமார், ஒன்றிய செயலாளர்கள் கே.ஜனார்த்தனன், எம். டேவிட், எம்.டி.சீனிவாசன், நகர செயலாளர் ஆலியார் சுபேர் அஹமத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க. ராஜமார்த்தாண்டன் ஆகியோர்கள் முன்னிலை யில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாநகர, ஒன்றிய,நகர,பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள் முன்னாள் முன்னேடிகள், வட்ட,வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள், விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றிபெற செய்வதோடு அல்லாமல் ஒட்டுமொத்த தமிழக மக்களின் ஒருமித்த கண்டன குரலாக ஓங்கி ஒலித்திட ஒன்றிணைவோம், வென்று காட்டுவோம் என சூளுரைத்து முழக்கம் எழுப்புவோம்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்ட மன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார். எம்.எல்.ஏ., தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! எஸ்.முரளி முன்னிலை!

# ஒன்றிய அரசு - அடிமை அ.தி.மு.க.வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## 125 வட்டக் கழகத்தினருக்கு வட்டச் செயலாளர் அ.தவநேசன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 15-

மயிலை கிழக்குப் பகுதி 125 வது வட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் இன்று (15.3.2026 - ஞாயிறு) காலை 10 மணியளவில் டாக்டர் அம்பேத்கர் பாலம் பகுதியில் சமையல் எரிவாயு தட்டுப்பாடுகளால் மக்களை வாட்டி வதைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அடிமை அ.தி.மு.க. கட்சிகளை கண்டித்து தோழமை கட்சிகளுடன் இணைந்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தலைமையிலும், பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே கழக நிர்வாகிகள் தவறாமல் வருகை தந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 125வது வட்டக் கழகச்செயலாளர் அ. தவநேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர். மார்ச் 15-

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி விருத்தாசலம் நெய்வேலி பண்ருட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர்களில் இன்று (15.03.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

151 திட்டக்குடி சட்ட மன்ற தொகுதிமங்களூர் தெற்கு ஒன்றியம் மங்களூர்

மங்களூர் வடக்கு ஒன்றியம் அடரிமங்களூர் கிழக்கு ஒன்றியம் ஆவினங்குடி,

திட்டக்குடி நகரம் பேருந்து நிலையம் அருகில் திட்டக்குடி.

நல்லூர் தெற்கு ஒன்றியம் பெண்ணாடம் பேருந்து நிலையம்,

பெண்ணாடம் பேரூர்

152விருத்தாசலம் சட்ட மன்ற தொகுதி

நல்லூர் வடக்கு ஒன்றியம் வேப்பூர் கூட்டு சாலை

விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் பூவனூர் தபால் நிலையம் அருகில்.

விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் வீராரெட்டிக் குப்பம்.

விருத்தாசலம் நகரம் தலைமை தபால் நிலையம் விருத்தாசலம்.

கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் இருப்பு , கம்மாபுரம் மேற்கு ஒன்றியம் பாலக் கொல்லை, மங்கலம் பேட்டை பேரூர் மங்கலம் பேட்டை

153 நெய்வேலி சட்ட மன்ற தொகுதி, பண்ருட்டி தெற்கு காடாம்புலியூர்

நெய்வேலி நகரம் மெயின் பஜார் காமராஜர் சிலை அருகில்

குறிஞ்சிப்பாடி மேற்கு ஆர்ச் கேட் இந்திரா நகர்

154 பண்ருட்டி சட்ட மன்ற தொகுதி

அண்ணாகிராமம் கிழக்கு மேற்கு தொரப் பாடி

மேல்பாட்டாம்பாக்கம் பேரூர்அண்ணாகிராமம்

பண்ருட்டி நகரம் இந்திரா காந்தி சிலை அருகில் பண்ருட்டி

நெல்லிக்குப்பம் நகரம் தபால் நிலையம் நெல்லிக் குப்பம்

பண்ருட்டி வடக்கு ஒன்றியம் அங்குசெட்டிப்பாளையம்

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுகுழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக நகர கழக பேரூர் கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் தொமுச நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கடலூர் மேற்கு மாவட்ட மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த மாநில மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும் என மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு! ஒன்றிய அரசையும் - அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ. மகேஷ் வேண்டுகோள்!



கன்னியாகுமரி, மார்ச் 15-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்றிய பா.ஜ.க. NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் - வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர். இதற்கு நமது கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார்.


ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்காத ஒன்றிய பா.ஜ.க. NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (15.03.2026 - ஞாயிறு) காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், தலைமை தபால் நிலையம் அருகில் வைத்து எனது தலைமையில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"நடைபெற உள்ளது.

அதுபோன்று அதே தினத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களிலும் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களின் தலைமையிலும், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் முன்னிலையிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

ஆகவே, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. வின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதி கள், கழக நிர்வாகிகள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜே.எஸ். இராசு
**மார்ச் 15 (2000)**



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**